பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 21

பகுதி 1: ஆயத்துல் குர்ஸீயின் சிறப்புகளும் விளக்கங்களும் / 25

1 தொடக்கம் / 27

2 மகத்தான இறைவசனம் / 30

உபை இப்னு கஅப் ﷺ அவர்களின் குர்ஆன் ஞானம் / 31

உபை இப்னு கஅப் ﷺ சிறப்பு / 32

எதனால் ஆயத்துல் குர்ஸீ மகத்தானது? / 33

நபித்தோழர்களின் தவ்ஹீது அறிவும் வாழ்க்கையும் / 34

இறைவசனங்கள் ஒன்றைவிட மற்றொன்று சிறப்புப் பெறுவது எப்படி? / 35

3 ஆயத்துல் குர்ஸீ ஓதுவதின் சிறப்புகள் / 39

1. கடமையான தொழுகைகளை முடித்தப் பின்பு / 39

2. உறங்குவதற்கு முன்பு / 40

3. காலை, மாலை திக்ருகளின்போது / 43

ஷைத்தானின் கோளாறுகளைவிட்டுப் பாதுகாப்பு / 45

பொருள் விளங்கி ஓதுவதின் சிறப்பு / 47

4 சுருக்கமான சாராம்சம் / 50

5 அறிஞர்களின் அழகிய விரிவுரை / 53

6 ஆயத்துல் குர்ஸீயின் தொடக்கம் / 59

லா இலாஹ இல்லல்லாஹ் - படைப்பின் நோக்கம் / 59

கலிமாவைக் குறித்து மறுமையில் கேள்வி / 60

கலிமாவைப் புரிந்து செயல்படுவதே முக்கியம் / 61

கலிமாவின் பொருள் / 63
கலிமாவைப் புரியச் செய்யும் இறைவசனங்கள் / 65
கலிமா ஒரு வெற்று வார்த்தை அல்ல / 68

பகுதி 2: ஆயத்துல் குர்ஸீ முன்வைக்கும் தவ்ஹீது ஆதாரங்கள் / 71

1 தவ்ஹீதின் முதல் ஆதாரம் / 73
2 தவ்ஹீதின் இரண்டாவது ஆதாரம் / 74
3 தவ்ஹீதின் மூன்றாவது ஆதாரம் / 79
4 தவ்ஹீதின் நான்காவது ஆதாரம் / 81
5 தவ்ஹீதின் ஐந்தாவது ஆதாரம் / 84
6 தவ்ஹீதின் ஆறாவது ஆதாரம் / 89
7,8 தவ்ஹீதின் ஏழாவது, எட்டாவது ஆதாரங்கள் / 93
9 தவ்ஹீதின் ஒன்பதாவது ஆதாரம் / 96
10 தவ்ஹீதின் பத்தாவது ஆதாரம் / 100
11,12 தவ்ஹீதின் பதினொன்று மற்றும் பன்னிரண்டாவது ஆதாரங்கள் / 103

2

மகத்தான இறைவசனம்

✿

முஸ்லிம் நபிமொழி நூலில் ஒரு செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. உபை இப்னு கஅப் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

يَـا أَبَا الْمُنْذِرِ، أَتَـدْرِي أَيُّ آيَةٍ مِنْ كِتَابِ اللهِ مَعَكَ أَعْظَمُ؟ قَالَ: قُلْتُ: اللهُ وَرَسُـولُهُ أَعْلَـمُ. قَالَ: يَا أَبَـا الْمُنْذِرِ أَتَدْرِي أَيُّ آيَـةٍ مِنْ كِتَابِ اللهِ مَعَكَ أَعْظَـمُ؟ قَالَ: قُلْتُ: {اللهُ لَا إِلَهَ إِلَّا هُـوَ الْـحَيُّ الْقَيُّومُ} قَالَ: فَضَرَبَ فِي صَـدْرِي، وَقَالَ: وَاللهِ لِيَهْنِكَ الْعِلْمُ أَبَا الْمُنْذِرِ

‘அபுல் முன்திரே! உம்முடன் உள்ள அல்லாஹ்வின் வேதத்தில் எந்த வசனம் மிக மகத்துவம் வாய்ந்தது என நீர் அறிவீரா?’ என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கேட்டார்கள். ‘அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே மிக்க அறிந்தவர்கள்’ என நான் கூறினேன். ‘அபுல்முன்திரே! உம்முடன் உள்ள அல்லாஹ்வின் வேதத்தில் எந்த வசனம் மிக மகத்துவம் வாய்ந்தது என நீர் அறிவீரா?’ என்று நபி ﷺ அவர்கள் (மீண்டும்) வினவ, ‘அல்லாஹு லா இலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கய்யூம்’ (என்று தொடங்கும் ஆயத்துல் குர்ஸீதான்) என்று கூறினேன். பிறகு, நபி ﷺ அவர்கள் (பாராட்டும் விதமாக) எனது நெஞ்சிலே அடித்து, ‘அல்லாஹ்வின்மீது ஆணையாக! அபுல் முன்திரே! கல்வி ஞானம் உமக்கு வாழ்த்தாக அமையட்டும்’ என்று கூறினார்கள். (முஸ்லிம் 810)

அல்லாஹ் உங்களுக்கு உபகாரம் புரிந்துள்ள, உங்களுக்கு எளிதாக்கியுள்ள, உங்களுக்கு வழங்கியுள்ள இந்தக் கல்வி ஞானம் உங்களுக்கு வாழ்த்தாக அமையட்டும் என நபியவர்கள் வாழ்த்தினார்கள். மேலும், இந்த வசனத்தின் உயர்வைக் காண்பிப்பதற்காகவும் பெருமைப்படுத்துகிறரீதியிலும் அவருக்கு

3

ஆயத்துல் குர்ஸீ ஓதுவதின் சிறப்புகள்

✿

ஆயத்துல் குர்ஸீ இந்த அளவு மேன்மைமிக்கதாக இருப்பதால் தான் அதை அதிகமாக ஓதுவதை நபிமொழிகளில் வலியுறுத்தப் பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் அதைப் பேணுதலாகச் செய்து வருவதற்காகவும் தினமும் பலமுறை அதை ஓதுவதற்காகவும் அன்றாட வழமையான அமலாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

1. கடமையான தொழுகைகளை முடித்தப் பின்பு

தொழுது முடித்தபின் அதை ஓத ஆர்வமூட்டி நபிமொழிகள் வந்துள்ளன. அபூ உமாமா ﷺ அவர்கள் அறிவிப்பதாக நஸாயீ ஹதீஸ்[9] நூலில் கூறப்பட்டுள்ளது:

مَنْ قَرَأَ آيَةَ الْكُرْسِيِّ دُبُرَ كُلِّ صَلَاةٍ مَكْتُوبَةٍ , لَمْ يَمْنَعْهُ مِنْ دُخُولِ الْجَنَّةِ إِلَّا أَنْ يَمُوتَ

‘ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்குப் பின்பும் ஆயத்துல் குர்ஸீயை யார் ஓதிவருகிறாரோ சுவனம் நுழைய மரணத்தைத் தவிர வேறு எதுவும் அவருக்குத் தடையாக இருக்காது’

9 ஸுன்னா (اَلسُّنَّةُ), ஹதீஸ் (اَلْحَدِيْثُ): மொழி வழக்கில் ஸுன்னா என்றால் வழி, பாதை. மார்க்க வழக்கில் இச்சொல் நபி ﷺ அவர்களின் பேச்சுகள், செயல்கள், அங்கீகாரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும். அவை நபியவர் களின் தோழர்கள் மூலம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. அவர்களிடமிருந்து சங்கிலித் தொடராக அறிவிக்கப்பட்டு, இஸ்லாமியப் பேரறிஞர்களான பல இமாம்களால் தொகுக்கப்பட்டன. இவ்வாறு தொகுக்கப் பட்ட செய்திகளை ஹதீஸ் என்பார்கள். (அஹாதீஸ் இதன் பன்மை.) மொழிரீதியாக ஹதீஸ் என்றால் செய்தி, தகவல், உரையாடல், வரலாறு, புதியது எனப் பொருள். நபியவர்களின் வருகைக்குப் பின் அவர்களைப் பற்றிய செய்திகளே பரவலாகியதால், ஹதீஸ் என்றாலே அவர்களைப் பற்றித்தான் எனும் நிலை உருவாகிவிட்டது. (ப.கு.)

6

ஆயத்துல் குர்ஸீயின் தொடக்கம்

✿

اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ

‘அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இரட்சகன் இல்லை’

என்ற தவ்ஹீதின் நிலையான வாசகத்தின்மூலம் இந்த வசனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வாசகம் மகத்துவம் பொருந்திய வாசகமாகும்; மட்டுமன்றி, அனைத்து வாசகங்களைவிடவும் மிக மகத்துவம் பொருந்தியதாகும்.

லா இலாஹ இல்லல்லாஹ்[18] – படைப்பின் நோக்கம்

இந்த வாசகத்தைக்கொண்டே பூமியும் வானங்களும் நிலை பெற்றுள்ளன. இந்த வாசகத்திற்காகவே அனைத்துப் படைப் பினங்களும் படைக்கப்பட்டுள்ளன. இந்த வாசகத்தைக் கொடுத்தே அல்லாஹ் தூதர்களை அனுப்பி, வேதங்களை இறக்கிவைத்தான். சுவனத்தின் கடைவீதிகளும் நரகமும் நிலைபெறுகின்றன.

18 லா இலாஹ இல்லல்லாஹ் (لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ) என்பது இஸ்லாமிய ஓரிறைக் கொள்கை யின் உறுதிமொழியாகும். வணங்கப்படுவதற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை (لَا مَعْبُودَ بِحَقٍّ إِلَّا اللهُ) என்பது இதன் பொருள். இதை மனதால் உறுதியாக நம்பி, நாவினால் சாட்சி கூறினால்தான் ஒருவர் முஸ்லிமாக முடியும். லா இலாஹ (எதுவும் வணக்கத்திற்குரியது அல்ல) என்ற சொல்லால் மக்கள் வணங்கி வரும் அனைத்தும் மறுக்கப்படுகிறது. இல்லல்லாஹ் (அல்லாஹ் தவிர) என்ற சொல்லால் அல்லாஹ் மட்டும்தான் வணக்கங்களுக்கு உரியவன் என்று உறுதிசெய்யப்படுகிறது. இவ்விரண்டு தூண்களின்மீதே இந்த நம்பிக்கைப் பிரகடனம் நிலைக்கின்றது. இதனைச் செயலில் வெளிப்படுத்துவதே இஸ்லாமிய வாழ்வியல். (ப.கு.)

‘எங்கள் மூதாதையர்கள் வணங்கிக்கொண்டிருந்தவற்றை நாங்கள் புறக்கணித்துவிட்டு அல்லாஹ் ஒருவனையே வணங்கும்படிச் செய்யவா நீங்கள் நம்மிடம் வந்தீர்கள்?’ (குர்ஆன் 7:70) என்பதாக அந்த மக்கள் கூறினார்கள்.

அந்த நபி அந்த மக்களை அழைத்தது லா இலாஹ இல்லல் லாஹ் என்ற ஏகத்துவக் கலிமாவின் பக்கமே ஆகும். ஏனெனில், இந்தக் கலிமாவின் நோக்கம், ‘அல்லாஹ்வைத் தவிர உள்ள எவற்றையும் கடவுளாக ஏற்று வணங்கக் கூடாது, தனித்தவனான அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும், அவனுக்கு எந்த இணையாளனும் இல்லை’ என்பதேயாகும் என்று அவர்கள் விளங்கிவைத்திருந்தார்கள். லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா அல்லாஹ்வைத் தவிர உள்ள அனைத்துக்கும் கடவுள் தன்மை இல்லை என்பதையும் அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரிய இறைவன் என்பதையும் பொதிந்துள்ளது. அல்லாஹ்வைத் தவிர உள்ள வானவர்கள், நபிமார்கள் யாராயினும் வணக்கத்திற்குரியவர்கள் அல்ல. யாருக்காக வேண்டியும் வணக்கம் புரிவது என்பது கிடையாது. வணக்கவழிபாட்டின் வகைகளான பிரார்த்தனை செய்தல், அறுத்துப் பலியிடல், நேர்ச்சை செய்தல் போன்ற உள்ளத்தோடு சம்பந்தப்பட்ட எந்த வணக்கமாயினும் அடியான் அல்லாஹ்வுக்காக வேண்டி மட்டுமே செயல்பட வேண்டும். (தைஸீருல் அஸீஸில் ஹமீத், பக்கம் 78)

கலிமாவைப் புரியச் செய்யும் இறைவசனங்கள்

லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவின் அர்த்தத்தை விளக்குகின்ற அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்ற பல ஆதாரங்கள் குர்ஆனில் வந்துள்ளன. அவற்றில் ஒன்று அல்லாஹ் கூறுகின்றான்:

وَإِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الرَّحْمَٰنُ الرَّحِيمُ

‘(மனிதர்களே!) உங்கள் வணக்கத்திற்குத் தகுதியானவன் ஒரே இறைவனே ஆவான். அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையவனுமாகிய அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை.’ (குர்ஆன் 2:163)

1

தவ்ஹீதின் முதல் ஆதாரம்

✿

الْحَيُّ

‘என்றும் உயிரோடிருப்பவன்.’

அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டியது கட்டாயக் கடமை என்பதற்கு இந்த வார்த்தை தெளிவான ஆதாரமாகும். மரணமே இன்றி நிறைவான முறையில் உயிரோடிருப்பவன் என்று வர்ணனை செய்யப்பட்டிருப்பது, ‘அவன் முன்னொரு காலத்தில் இல்லாமலிருந்து பின்பு தோன்றினான்’ என்று சொல்வதற்கோ, ‘அவன் இனிமேல் இல்லாமலாகிவிடுவான்’ என்று சொல்வதற்கோ இடமின்றி ஆக்கிவிட்டது. அவனது தன்மையில் எந்தக் குறையும் பழுதும் குறுக்கிடாது. நம்முடைய இரட்சகன் மகத்துவமும் பரிசுத்தமும் வாய்ந்தவன். அவனது வாழ்வு அவனது பரிபூரணப் பண்புகள் அனைத்தும் உள்ளடக்கிக்கொண்டதாகும். ஆகவே,

وَتَوَكَّلْ عَلَى الْحَيِّ الَّذِي لَا يَمُوتُ

‘மரணமற்ற என்றும் நிரந்தரமான அல்லாஹ்வையே நீங்கள் நம்புங்கள்’ (குர்ஆன் 25:58)

என்று அல்லாஹ் கூறுவது போல அவன் வணங்கப்படவும் ருகூஉ செய்யப்படவும் ஸுஜூது செய்யப்படவும் தகுதியானவன். இனிமேல் மரணமாகிவிடுகின்ற உயிரோடிருப்பவரோ, உயிராக இல்லாத இறந்துபோனவரோ, அல்லது அறவே உயிரில்லாத ஜடப்பொருளோ எதுவுமே எவருமே வணங்கப்படத் தகுதியாக இல்லை. ஏனெனில், மரணமே இல்லாத, என்றும் உயிரோடிருப்பவனுக்கே (அல்லாஹ்வுக்கே) வணக்கம் உரித்தானது.

11,12

தவ்ஹீதின் பதினொன்று மற்றும் பன்னிரண்டாவது ஆதாரங்கள்

✿

وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ

‘அவன் மிக உயர்ந்தவன்; மிக மகத்துவமானவன்.’

இவை இரண்டும் தவ்ஹீதின் ஆதாரங்களில் இரண்டு ஆதாரங்கள் ஆகும். மேலும், அல்லாஹ் அனைத்துப் படைப்பினங்களைவிடவும் உயர்வானவனாக உள்ளான் என்பதாகவும் அவனது மகத்துவம் பரிபூரணமானது என்பதாகவும் கூறப்படுவதின்மூலம் மற்றவை தவிர அவன் மட்டுமே வணங்கப்படத் தகுதியானவன் என்பதாக இவ்விரு திருப்பெயர்களும் உணர்த்துகின்றன.

‘அவன் மிக உயர்ந்தவன்’ என்ற பொருளைத் தரும் வஹ்ஹ்வல் அலிய்யு (وَهُوَ الْعَلِيُّ) என்ற வாசகத்தில் உள்ள அலிஃப், லாம் என்ற இரண்டு எழுத்துகளையும் ‘இஸ்திங்ராக்’ (الِاسْتِغْرَاقُ) என்பதாக அறபியில் கூறுவார்கள். இந்த அலிஃப், லாம் சேர்வதால் விரிவானப் பொருள் இந்த வாசகத்திற்கு ஏற்படுகிறது. ‘உள்ளமை, அடக்கியாளுதல், சக்தி ஆகிய அனைத்து வகையான உயர்வுகளுக்கும் அவன் உரித்தானவன்’ என்பதாகப் பொருள் விரியும். உயர்வான அந்தஸ்துள்ளவனாக அவன் இருப்பதோடு உள்ளமை ரீதியிலும் அடக்கியாள்கின்ற ரீதியிலும் அனைத்து வகையிலும் அவனுக்கே உயர்வு உண்டு.

ஆகவே, அல்லாஹ் தன் திருமறையில்,

الرَّحْمَٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوَىٰ

‘அர்ரஹ்மான் ஆகிய அளவற்ற அருளாளன் அல்லாஹ் அர்ஷின்மீது உயர்ந்துவிட்டான்’ *(குர்ஆன் 20:5)*